**சுருக்கம்**

திட்டங்கள் – கிராம ஊராட்சிகளிலுள்ள கைப்பம்புகள், விசைப் பம்புகள் மற்றும் தெரு விளக்குகள் ஆகியவற்றுக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் – திருத்திய கட்டணம் மற்றும் நெறிமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–3) துறை**

அரசாணை (நிலை) எண்.157 நாள் : 21.12.2015

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண். 223, ஊரக வளர்ச்சி (தி3) துறை, நாள் 19.12.1994.
2) அரசாணை (நிலை) எண். 84, ஊரக வளர்ச்சி (தி3) துறை, நாள் 05.05.1998.
3) அரசாணை (நிலை) எண். 63, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி2) துறை, நாள் 29.6.2006.
4) அரசாணை (நிலை) எண். 55, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–3) துறை, நாள் 01.04.2008.
5) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை–15 நக.எண். 26938/2015/பரா 3–2 நாள் 22.7.2015.

******

**ஆணை:**

பார்வை 1–ல் காணும் அரசாணையில், கிராம ஊராட்சிகளில் பயன்படுத்தப்படும் குழல் விளக்குகள், சோக்குகள், ஸ்டார்ட்டர்கள், பல்புகள், உயர் மின் பாதரச ஆவி விளக்கு/உயர் மின் சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் தெருவிளக்கு உதிரி பாகங்களை மாற்றுவதற்கு பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இதன்பின்னர், பார்வை 2 மற்றும் 3–ல் காணும் அரசாணைகளில், கிராம ஊராட்சிகளில் உரிய நேரத்தில் கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளை பராமரித்து சீரான குடிநீர் விநியோகம் செய்திட கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு ஆகியவற்றுக்கான ஆண்டு பராமரிப்பு செலவின உச்சவரம்பு நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு ஆகியவற்றுக்கான ஆண்டு பராமரிப்பு செலவின உச்ச வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டு பல ஆண்டுகள் கடந்து விட்டதாலும், உதிரி பாகங்களின் விலை மற்றும் அவற்றை பொருத்துவதற்கு வழங்கப்படும் கூலி ஆகியவை உயர்ந்துவிட்டதாலும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஆண்டு பராமரிப்பு செலவின உச்ச வரம்பினை உயர்த்தக் கோரியுள்ளதாக பார்வை 5ல் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

(த.பி.பா)

3. மேற்காணும் சூழலில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் கிராம ஊராட்சிகளால் ஊரகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் குடிநீர் விநியோகம் மற்றும் தெரு விளக்குகள் ஆகியவற்றுக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் மற்றும் நெறிமுறைகளை கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்க அரசினை கோரியுள்ளார்.

**1. (அ) கைப்பம்புகள்**

| திருத்தியமைக்கப்பட வேண்டிய பராமரிப்பு இனம் | தற்போது அனுமதிக்கப்பட்ட செலவினம் (ரூ.) | திருத்தியமைக்கப்பட வேண்டிய செலவினம் (ரூ.) |
|---|---|---|
| கைப்பம்புகள் | ரூ.600/- | ரூ.1000/- |

(கூலித் தொடர்பான கூறு மட்டும்)

**(ஆ) விசைப்பம்புகள்** :

(i) தற்போது அனுமதிக்கப்பட்ட பராமரிப்பு செலவினம் ரூ.7,500/-

(ii) திருத்தியமைக்கப்பட வேண்டிய செலவினம் கீழ்க்கண்டவாறு:-

| | | |
|---|---|---|
| i. | 2 குதிரை திறன் கொண்ட மோட்டாருக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் | ரூ.7500/- (சிறு மின் விசைப்பம்புகள்) |
| ii. | 5 குதிரை திறன் கொண்ட மோட்டாருக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் | ரூ.10,000/- |
| iii. | 7.5 குதிரை திறன் மற்றும் அதற்கு மேற்பட்ட திறன் கொண்ட மோட்டாருக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் | ரூ.12,000/- |

( கூலி மற்றும் உதிரிபாகங்களுக்கான செலவினக் கூறு)

**2. தெரு விளக்கு உபகரணங்கள் பொருத்துதல்/மாற்றுதல்**

| வ. எண். | தெரு விளக்கு உபகரணங்கள் பொருத்துதல்/மாற்றுதல் | தற்போது அனுமதிக்கப்பட்ட செலவினம் ரூ. | திருத்தியமைக்கப்பட வேண்டிய கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1) | இன்கேன்டசென்ட் வகையான விளக்குகள் மாற்றுவதற்கான கட்டணம் | 5/- | (இன்கேன்டசென்ட் வகையான விளக்குகள் தற்போது ஊராட்சிகளில் பயன்படுத்தப்படுவதில்லை) |
| 2) | குழல் விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் மாற்றுவதற்கான கட்டணம் | 20/- | 50/- |
| 3) | சோக்குகள், ஸ்டார்ட்டர்கள் மற்றும் கன்டன்சர்கள் மாற்றுவதற்கான கட்டணம் | 10/- | 25/- |

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன்படி, கிராம ஊராட்சிகளில் கைம்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவற்றுக்கான ஆண்டு பராமரிப்பு கட்டணம் மற்றும் நெறிமுறைகள் ஆகியவைகளை கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்து அரசு ஆணை வெளியிடுகிறது.

**<u>கைம்பம்புகள்:</u>**

கைப்பம்புகளுக்கான ஆண்டு பராமரிப்பு செலவின உச்சவரம்பு ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆகும்.

**<u>நெறிமுறைகள்:</u>**

1) ஒரு கைப்பம்புக்கான ஆண்டு பராமரிப்பு செலவின உச்சவரம்பு ரூ.1000/– ஆகும். இச்செலவினத்தை மேற்கொள்ள ஊராட்சித் தீர்மானம் மட்டுமே போதுமானது.

2) மேற்படி உச்சவரம்பு கூலிக்கு மட்டுமே பொருந்தும். தேவையான பராமரிப்பு பொருட்கள் மாவட்ட கொள்முதல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விலையிலேயே வாங்கப்பட வேண்டும்.

3) ஒரு குறிப்பிட்ட கைப்பம்பிற்கு, முதலாவது அல்லது இரண்டாவது முறை பழுது ஏற்படும் போது பராமரிப்பு செலவினம் ரூ.1000/–க்கு மேல் அதிமாகும்பட்சத்தில், ஒன்றிய பணி மேற்பார்வையாளரின் (Overseer) மதிப்பீடு பெற்று, ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் மூலமே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4) நிரந்தரமாக வறண்ட அல்லது செயல்படாத கைப்பம்புகளை, பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படக் கூடாது.

**<u>விசைப்பம்புகள்:</u>**

| | | |
|---|---|---|
| i. | 2 குதிரை திறன் கொண்ட மோட்டாருக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் | ரூ.7500/– (சிறு மின் விசைப்பம்புகள்) |
| ii. | 5 குதிரை திறன் கொண்ட மோட்டாருக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் | ரூ.10,000/– |
| iii. | 7.5 குதிரை திறன் மற்றும் அதற்கு மேற்பட்ட திறன் கொண்ட மோட்டாருக்கான ஆண்டு பராமரிப்பு செலவினம் | ரூ.12,000/– |

**<u>நெறிமுறைகள்:</u>**

1) 5 குதிரை சக்தி திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட விசைப் பம்புகளுக்கான ஆண்டு பராமரிப்பு செலவின உச்ச வரம்பு ரூ.10,000/– ஆகும்.

2) ஒரு குறிப்பிட்ட விசைப்பம்பிற்கு, முதலாவது அல்லது இரண்டாவது முறை பழுது ஏற்படும் போது, பராமரிப்பு செலவினம் ரூ.10,000/–க்கு மேல் அதிகமாகும்பட்சத்தில், ஒன்றிய பணி மேற்பார்வையாளரின் மதிப்பீடு பெற்று, ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் மூலமே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3) மேற்படி உச்ச வரம்புக்குள் ஏற்படும் செலவினத்தை ஊராட்சி மன்ற தீர்மானத்தின் மூலம் கிராம ஊராட்சிகளே மேற்கொள்ளலாம். இதற்கென தனியாக ஒன்றிய பணி மேற்பார்வையாளர்/பொறியாளரின் மதிப்பீடு மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை.

4) ஆண்டு பராமரிப்பு செலவினம் வரையறுக்கப்பட்டுள்ள உச்சவரம்பை விட அதிகமாகும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஒன்றிய பணி மேற்பார்வையாளர்/உதவிப் பொறியாளரிடம் மதிப்பீடு மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட வேண்டும். இத்தகைய நிகழ்வுகளில் பணிகள் மேற்கொள்ளும் பொழுது ஒப்பந்தப்புள்ளி நடைமுறையும் முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

**5) <u>பதிவேடுகள்:</u>**

கிராம ஊராட்சிகளில் கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் பராமரிப்புக்கென தனித்தனியே பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கைப்பம்பு/விசைப்பம்புக்கும் செலவினம் மேற்கொள்ளப்பட்ட தேதி மற்றும் செலவினத் தொகை விவரம் பதிவேட்டில் பதியப்பட வேண்டும். இப்பதிவுகள் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை சரிபார்ப்பதற்கும், செலவினம் மேற்கொள்ளப்பட்ட தொகை உச்ச வரம்பிற்குள் செய்யப்பட்டுள்ளதா அல்லது உச்ச வரம்பிற்கு மேல் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய உதவும்.

<u>தெருவிளக்கு உபகரணங்கள் பொருத்துதல் / மாற்றுதல்:</u>

| | | |
|---|---|---|
| 1) | குழல் விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் மாற்றுதல் செலவினம் | ரூ. 50/– |
| 2) | சோக்குகள், ஸ்டார்ட்டர்கள் மற்றும் கன்டன்சர்கள் மாற்றுதல் செலவினம் | ரூ. 25/– |

(இன்கேன்டசென்ட் வகையான விளக்குகள், கிராம ஊராட்சிகளில் தற்போது பயன்படுத்தப்படுவதில்லை என்பதால் இதற்கான கட்டணம் நிர்ணயம் செய்யப்படவில்லை.)

6. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு.எண்.67960/நிதி (ஊ.வ.) துறை, நாள் : 16.12.2015–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ககன்தீப் சிங் பேடி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை தவிர)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
மாநில கணக்காயர், சென்னை– 9/18/35
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

தேசிய தகவல் மையம், சென்னை–9

நகல்:
மாண்புமிகு  நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரின்
முதுநிலை  நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ஊரக வளர்ச்சி) துறை,  சென்னை–9.
எரிசக்தித் துறை/நகராட்சி நிர்வாகம்  மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–9
இருப்புக்கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.